# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 117 இதழ் : 18 11-10-1991 ( ஒக். 11 — ஒக். 25 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


University of Jaffna Sri Lanka RECEIVED

## குருக்களுக்கான ஞானொடுக்கம்

யாழ். மறைவட்ட குருக்களுக்கான வருடாந்த ஞானொடுக்கம் நவம்பர் மாதம் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெறும். 1வது ஞானொடுக்கம் நவம்பர் மாதம் 10 ஆம் திகதியும் 2வது ஞானொடுக்கம் நவம்பர் மாதம் 17 ஆம் திகதியும் ஆரம்பமாகும்.

### மதம் மாற்றுவது தொடர்பாக கத்தோலிக்க திருச்சபைக்கு மாசுகற்பிக்க முயலும் பத்திரிகைச் செய்திகளை ஆயர்பேரவைச் செய்தி மறுத்துள்ளது

# பிற கிறிஸ்தவ சபைகளின் செயல்களுக்கு கத். திருச்சபை பொறுப்பாக இருக்கமுடியாது

**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் செயலாளர் பேருள்திரு ஒஸ்வல்ட் கோமஸ் ஆண்டகை அவர்கள் சென்ற மாதம் 11ஆம் திகதி பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் பிற கிறிஸ்தவ சபைகளின் செயல்களுக்கு கத்தோலிக்க திருச்சபை பொறுப்பாக இருக்க முடியாது என்றும், தாம் எவரையும் தவறான முறையில் மதம் மாற்றுவதில்லை என்றும் தெரிவித்தார்.**

ஆயர் பத்திரிகைகளுக்கு அளித்துள்ள செய்தியில் கத்தோலிக்க திருச்சபையானது, பிற கிறிஸ்தவ சபைகளின் செயல்களுக்குப் பொறுப்பாயிருக்க முடியாது என்றும், கத்தோலிக்க திருச்சபைக்கு மாசுகற்பிக்கும் விதத்தில் பத்திரிகைச் செய்திகள் வெளியாகியுள்ளதைக் கண்டித்தும் உள்ளார்.

''சில மதத் தலைவர்களும், வேறு சிலரும் கூறியுள்ள கருத்துக்கள் பத்திரிகையில் வெளியாகியுள்ளன. அவை எமது திருச்சபையே இம் மதமாற்றங்களை மேற்கொள்வது போன்ற கருத்தை மக்கள் மனத்தில் தோற்றுவிக்கப் பார்க்கின்றன. இத்தகைய முயற்சியில் கத்தோலிக்க திருச்சபை ஈடுபடவில்லை என திட்டவட்டமாக கூற விரும்புகிறோம்'' என இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் சார்பில் அதன் செயலர் பேருள்திரு ஒஸ்வல்ட் கோமஸ் ஆண்டகை வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எதுவித சான்றையோ, சம்பவத்தையோ குறிப்பிடாது மேலெழுந்தவாரியாக குற்றச்சாட்டுகளை முன்வைப்பது ஆபத்துக்குரிய செயல் என சுட்டிக்காட்டிய ஆயர் அவர்கள், இலங்கையில் பல்வேறு கிறிஸ்தவ சபைகளும் அடிப்படை வாதக்குழுக்களும் இருக்கின்றன என்றும், அவர்களுடைய செயல்களுக்கு கத்தோலிக்க திருச்சபை பொறுப்பாயிருக்க வில்லை என்றும் தனது பத்திரிகைச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பிராமணரல்லாத இந்துக்களுக்த குருத்துவ பயிற்சி

மேற்கு இந்தியாவில் உள்ள ஒரு சமூக நிலையம் இந்து சமூகத்தில் சாதி வேற்றுமையை உடைக்க ஒரு புது யுக்தியைக் கையாளுகிறது.

''ஞான பிரபோதினி'' என்ற இந்த நிலையம் குல, பால் வேற்றுமையின்றி இந்துக்களை குருத்துவ பணிகளில் பயிற்றிவருகிறது.

ஏற்கெனவே பயிற்றப்பட்ட 500 க்கு மேலான குருக்கள், முக்கியமாக சமூக விழாக்களில் பூஜைகள் செய்துவருகிறார்கள்.

1992 இல் வரப்போகும் கணேச விழா நூற்றாண்டு நிறைவுக்கு இப்போது இந் நிலையம் குருக்களைப் பயிற்றி வருகிறது.

தேசிய, சமூக உணர்வைத் தட்டியெழுப்பும் பொருட்டு இந்திய சுதந்திர வீரர் பால கங்காதர திலக் என்பவரால் கணேச விழா புதுப்பிக்கப்பட்டது.

இந்து வேத நூல்களை மக்கள் புரிந்து கொள்ளும் படிக்கு இந்நிலையம் சமஸ்கிருத மந்திரங்களை எளிதாக்கியுள்ளது.

## உயிர்ப்பூட்டும் பயிற்சித்திட்டம்

இளைஞருக்கு உயிர்ப்பூட்டும் ஒரு பயிற்சித்திட்டம் லாகூர் மறைமாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்றது. ஆனி, ஆடி மாதங்களில் கோரா டாக்கா என்னுமிடத்தில் நடைபெற்ற இப்பயிற்சியில் 29 பெண்களும் 30 ஆண்களும் கலந்து கொண்டனர்.

பயிற்சி பெற்றவர்கள் ஜூலை 15ஆம் திகதி மீண்டும் லாகூரில் ஒன்றுகூடி திட்டம் வகுத்து அங்கீகாரத்துக்கு அதை சமர்ப்பித்தனர்.

பயிற்சியின் போது அவர்களுக்கு உரையாற்றிய பிதா அன்டறு பிரான்ஸிஸ் இன்றைய சமுதாயத்தில் இளைஞர் பணி பற்றி குறிப்பிடும் போது அவர் ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் மட்டில் அவர்கள் கரிசனை கொள்ளவேண்டும் அதற்கு செபம் துணைபுரியும் என்று கூறினார்.

இளைஞர் ஆன்ம குருவாகிய பிதா டொமினிக் இளைஞருக்கு இந்தப் பண்பு இல்லாவிட்டால் பிறருடைய பிரச்சினைகளைத் தீர்க்க அவர்களால் முடியாது என்றார்.

பாகிஸ்தான் கத்தோலிக்க நிவாரண சேவையின் பிரதிநிதியான மாமூடா ஜிலானி சுகாதார விதிகளை அறியாத மக்களுக்கு அடிப்படை அறிவைக் கொடுத்து அவர்கள் தம் நோய்களுக்கு வைத்திய உதவியை நாடச் செய்ய வேண்டும் என்று கூறினார்.

## கத்தோலிக்க வைத்தியருக்கு ஜேர்மன் விருது

தென்னிந்தியாவில் தொழு நோயாளருக்கு 30 ஆண்டுகளாகச் சேவை செய்துவரும் அறுவை வைத்தியர் ஒருவருக்கு ஜேர்மன் அரசாங்கம் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள சிவானந்த புனர்வாழ்வு நிலையத்தில் பிரதம வைத்திய அதிகாரியான டாக்டர் ஏ. பெயின் என்பவருக்கு ஜேர்மன் தூதர் ஜெனரல் குத்ருண் வோகல் ஆகஸ்ட் 9 ஆம் திகதி இந்த விருதை வழக்கினார்.

டாக்டர் பெயின் கடந்த 10 ஆண்டுகளாக இந்நிலையத்தில் அறுவை சிகிச்சை மூலம் பல்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## வீட்டுக்கொரு நாட்காட்டி

**1992ஆம் ஆண்டுக்குரிய திருவழிபாட்டு நாட்காட்டியைப் பெற்றுக் கொள்ள உங்கள் பங்குத்தந்தையர் மூலம் இப்பொழுதே விண்ணப்பியுங்கள்.**

* அன்றாட திருப்பலி வாசகக் குறிப்புகள்.
* பெருவிழாக்கள்.
* பிறக்கும் குழந்தைகளுக்குப் பெயரிட ஒவ்வொரு நாளுக்குமுரிய புனிதர்களின் பெயர்கள்.
* இன்னும் பல பயனுள்ள நினைவூட்டுதல்கள்.

அனைத்தையும் ரூ. 40/= கொடுத்து மாதம் ஓர் இதழ் கொண்ட ஒரே நாட்காட்டியிற் பெற்றுப் பயனடையுங்கள். உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

## ஆறு மறைமாவட்டங்களின் இணைந்த சமூகப் பணி

மேற்கு வங்காளத்திலுள்ள ஆறு மறைமாவட்டங்கள் சமூகவுணர்வுத் திட்டங்களை இணைப்பதற்கு ஒரு புதிய சங்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இச்சங்கமானது வளர்ந்தோர் கல்வி, சுகாதாரம், சட்ட உணர்வு, சமூகப் பகுப்பாய்வு, சேமிப்புப்பழக்கம், கூட்டுறவு போன்ற அபிவிருத்தி அம்சங்களுக்கான பயிற்சித் திட்டங்களை இணைந்து செயற்படுத்த ஆலோசித்துள்ளது.

ஜேர்மன் நிறுவனமாகிய மிஸரேயோர் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் ஆண்டு தோறும் இம்மறைமாவட்டங்களைச் சேர்ந்த 300 இளைஞருக்கு தொழிற்துறையில் பயிற்சியளித்து வருகிறது.

அமெரிக்கத் திருச்சபை நிறுவனயான கத்தோலிக்க நிவாரணசேவை உணவுப் பொருள் விநியோகத்தின் மூலம் ஒரு மில்லியன் மக்களை அணுகவிருக்கிறது, அத்துடன் எயிட்ஸ் நோயிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு ஒரு விசேட திட்டத்தையும் ஆரம்பித்துள்ளது!

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

# மறைபரப்பு ஞாயிறு

எதிர்வரும் 20 ஆம் திகதி இவ் ஆண்டுக்கான மறை அறிவிப்புத்தினம் நினைவு கூரப்படுகின்றது இன்றைய தலைப்புச் செய்தியில் கூறப்படுவதுபோல் கத்தோலிக்க திருச்சபை எவரையும் தவறான முறையில் மதம் மாற்றும் முயற்சியில் ஈடுபடுவதில்லை.

மதச்சுதந்திரம் மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. ஒவ்வொரு மனிதனும் தனது மதத்தை முழுச் சுதந்திரத்துடன் பின்பற்றவும், அதனை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும் உரிமையுடையவன்

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உயரிய நோக்கில், நாம் பெற்றுக் கொண்ட மீட்பின் நற்செய்தியை மற்றவர்களும் பெற்றுக் கொள்ள எமது வார்த்தையாலும், வாழ்க்கையாலும் வழிகாட்டுவது நமது கடமையாகும்.

இவ்வாண்டுக்குரிய மறைபரப்பு ஞாயிறு தினத்தில் அகில உலகத் திருச்சபையுடன் இணைந்து இந் நிகழ்ச்சியின் ஆன்மீகப் பொருளைச் சிந்தித்தல் வேண்டும்.

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் இவ்வாண்டு விடுத்துள்ள மறைபரப்புத் தினச் செய்தியில் ஒவ்வொரு கிறிஸ்தவ சமூகமும் மறைபரப்புகிறது என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

திருச்சபையின் எல்லா அங்கத்தவர்களும் மறைப் பணிக்காகவே அபிஷேகம் செய்யப்பட்டுள்ளனர் என விளக்கும் திருத்தந்தை, அவர்கள் எல்லாருமே தமது சொந்த முயற்சியால் கிறிஸ்துவை உலகுக்குக் கொண்டு செல்ல வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது விசுவாசத்தை வாழ்வதாலும், அன்பின் கட்டளைகளைக் கடைப் பிடிப்பதாலும் தனது செல்வத்தைப் பிறரும் கண்டு கொள்ள வழிவகுக்கிறான் என்று கூறும் திருத்தந்தை குழந்தை யேசுவின் புனித திரேசம்மாள் தன் செபத்தாலும், பரித்தியாகத்தாலும், விசுவாச சாட்சியத்தாலும் மறைபரப்பு நாடுகளின் பாதுகாவலி ஆனது போல நாமும் செயற்படவேண்டும் என்கின்றார்.

மறைபரப்பு ஒன்றியம் (Missionary Union) ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டு நிறைவடைகிறது என்பதைச் சுட்டிக் காட்டிய திருத்தந்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்களது உயிரையே தியாகம் செய்து மறைப்பணி புரிந்து வரும் பல்வேறு குருக்கள் துறவிகள் பொதுநிலையினரை நினைவு கூர்ந்து அவர்களுக்குத் தமது அன்பையும், நன்றியையும் தெரிவித்துள்ளார்.

மறைப்பணியிலும், மனித முன்னேற்றப் பணியிலும் கிறிஸ்துவின் பெயரால் ஈடுபடும் அனைவரையுமே திருத்தந்தை நினைவு கூர்ந்துள்ளார்.

மறை அறிவிப்பு ஞாயிறு தினத்தை நினைவு கூரும் நாம் அனைவரும் நமது கடமைகளையும் உணர்ந்து கொள்வோம். இது நம்மேல் சுமத்தப்பட்ட ஒரு பணி. நற்செய்தியை அறிவிக்க வேண்டிய கடமையை நிறைவேற்றத் தவறியது மட்டுமன்றி அதற்கு தடைக் கற்களாகவும் வாழ்ந்திருக்கின்றோமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க உகந்த சந்தர்ப்பம் இது.

ஊரெல்லாம் விசுவாசம் பரவவேண்டும்,
தெருவெல்லாம் செபஒசை முழங்கவேண்டும்,
வீடெல்லாம் யேசுநாமம் ஒலிககவேண்டும்,
பாரெல்லாம் சுவிஷேசம் பரவவேண்டும்.

என்று அழகாகப்பாடி, நமக்கு ஊட்டப்பட்ட விசுவாசவித்தை நாம் இழந்து விடாது காப்பாற்றிக் கொள்வோம்.

எம்முடைய ஊக்கத்தினாலும், விடா முயற்சியினாலும், பிறரும் ஒளி பெறவும், வழி காணவும் உதவி புரிவோம்.

# நற்செய்திப் பணியில் புதுமை

**1991 ஜுலை 15 ஆம் திகதி அதிமேற்ராசனத்தின் குருகுழாமில் ஆயராகத் தெரியப்பட்ட பேரருட்திரு மல்கம் ரஞ்சித் அவர்களின் கருத்துரை** (சென்றவாரத் தொடர்ச்சி)

## பொதுநிலையினரை ஆயத்தம் செய்தல்

நான்கு ஆண்டு இறையியல் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களிற் சிலர் பொது நிலையினரின் விசேட பணியிற் சேர்க்கப்படலாம். அவர்கள் நன்கு ஆயத்தம் செய்யப்பட்டு, அவர்களின் பணி ஆரம்பம் சடங்கு ரீதியாகக் கொண்டாடப்பட்டு, பின்னர் அவர்கள் பங்குக் குருக்களுக்கு உதவியாக மறைபரப்பு வலயத்தில் சமூகத் தலைவர்களாகவும், உபதேசிமார்களாகவும் திரு வார்த்தைப் பணியாளராகவும் நியமிக்கப்படலாம். இவ்விதத்தில் பல புதுத்துறைகளில் மறைபரப்புப்பணியை விருத்தி செய்யலாம்.

புதிய நற்செய்திப்பணியில் ஒரு முக்கிய இடம் பாப்பரசரின் மறைபரப்பு உதவி சபைகளுக்கு அளிக்கப்படவேண்டும். இன்றைய நாட்களில் ''உதவி'' என்னும் சொல் தவறாக விளங்கிக் கொள்ளப்படலாம் என்ற படியால் இச்சபைகள் பாப்பரசரின் மறைபோதக சபைகளென்றே இப்போது அழைக்கப்படுகின்றன.

## மறைபரப்புச்சபையின் நோக்கம்

இவ்வேளையில் இச்சபைகள் பற்றிய ஓரிரு விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

(1) பணந்திரட்டுவது மட்டும் இச்சபைகளின் நோ கமன்று. அவற்றின் முக்கிய நோக்கம் சகல தலத்திருச்சபைகளும், சகல கிறிஸ்தவர்களும் ஏனைய தலத்திருச்சபைகளின் தேவைகளின் மட்டில் பொறுப்புணர்ச்சி கொள்ளுமாறு தூண்டுவதேயாகும். தேவைகள் என்பது பொருட் தேவை மட்டுமல்ல ஆகவே மேலும் பல செபங்களையும், தியாகங்களையும் ஆதரவையும் கேட்கின்றோம்.

## நிதியைப் பகிர சமமான வாக்குரிமை

(2) ஏனைய திருச்சபைகளைக் கட்டுப்படுத்தி அவற்றின் சுதந்திரத்திற்கு எல்லை போட உரோமைத் திருச்சபை கையாளும் முயற்சிகளல்ல இச்சபைகள் உண்மையில், ஐரோப்பிய, அமெரிக்க இயக்குநர்கள் தமது சிந்தனையை மற்றவர்கள் மேல் திணிக்க விரும்பிய போது வெளிப்படையாகவே அவர்களுக்கு எதிர்ப்புக் காட்டப்பட்டது. மாறாக, இச்சபைகள் கிறிஸ்துவின் மறையுடலில் பல்வேறு நாடுகளும், கண்டங்களும் கொண்டுள்ள ஆன்மீக ஒருமைப்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றன. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எங்கணுமுள்ள முழுத் திருச்சபையினதும் மறைபோதகத் தேவைகள் ஒவ்வொரு தலத்திருச்சபையினதும் கரிசனைக்குரியனவாகின்றன. எல்லாச் சபைகளும் ஏனையவற்றின் தேவைகளுக்குத் தாம் சமமான பொறுப்புள்ளவை என உணர்கின்றன. இதுவே மறைபோதகத்தின் கூட்டுப் பொறுப்பு. ''ஒவ்வொருவரும் தன் இயல்திறத்துக்கேற்றபடி, ஒவ்வொருவரும் தன் தேவைகளுக்கேற்றபடி'' என்பதே அடிப்படைக் கருத்தாகும்.

மேலும் உலகெங்கும் திரட்டிய நிதியைப் பகிரும்போது, பெரிய, சிறிய, செல்வந்த, வறிய நாடுகளின் தேசிய இயக்குநர்களாகிய எம்மெல்லோருக்கும் சமமான வாக்குரிமை உண்டு. ஒருவரும் நிபந்தனைகள் விதிப்பதில்லை. பணத்தைத் திரட்டுவதிலும், மிகுந்த தேவையுள்ளவர்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளிப்பதிலும் அனைவரும் பாடுபட்டு உழைக்கிறோம். இன்னும் வேண்டும் என்று யாசிப்பதற்காக மட்டும் நாம் அங்கு செல்வதில்லை. தேவையுள்ள நாடுகளுக்கு அதிக தொகை அளிக்கும்படி நாம் எடுத்துரைத்த வேளைகளுமுண்டு. ஒப்பந்த விதிகளோ, நிபந்தனைகளோ இன்றி அந்தந்த ஆயர்களிடம் நிதி வழங்கப்படுகிறது. இது பற்றிய அறிக்கைகள், படங்கள், கணக்குகள் எதுவும் கேட்கப்படுவதில்லை. சுருங்கக் கூறின், இது ஒரு குடும்பத்திலுள்ள சகோதரர்களைப் போல் சகல திருச்சபைகளும் தமது வாய்ப்பு வளங்களைப் பகிர்ந்து கொள்வதாகும்.

ஆன்மீக, இலௌகிக வாய்ப்புவளங்களைப் பகிர்ந்து கொள்ளும் முறையை இம் மறைபோதக சபைகள் தாமே கண்டுபிடிக்கவில்லை. திருச்சபையிலே நீண்டகாலமாக, ஆதிகாலந்தொட்டே நடந்து வந்த ஒன்றுக்கு அவை அமைப்பும், வடிவமும் கொடுத்தன. முதற் திருச்சபையே இத்தகைய பகிர்தல் மனப்பான்மைக்கும், கூட்டுப்பொறுப்புக்கும் வழிகாட்டியது. அவர்கள் மறைபோதகத்துக்காகச் செபித்தனர். (2 கொரிந் 1:11; பிலிப் 1:19.; கொலோ 4:3 ) ஊக்கமாக ஒத்துழைத்தனர். ( ரோமர் 16:1–15 ஒத்துழைத்தோரின் பட்டியல் ) வழி பயணஞ்செய்யும் போதகர்களை விருந்தோம்பினர். ( எபி 13:1-2 ) பெருந்தன்மையுடன் தமது பொருள்வளங்களைப் பகிர்ந்து கொண்டனர். ( பிலிப் 4 : 16 ; 2 ) கொரிந் 8 : 1–9 ; 1 கொரிந் 16: 1–3; ரோமர் 15:26 )

## கூட்டுப்பொறுப்பு

ஆகவே மறைபோதக அலுவலில் இச்சபைகளுக்கு முக்கியமான ஒரு பங்குண்டு. ஏனெனில் ஆதித்திருச்சபையில் நிகழ்ந்தவற்றையொட்டி, மறைபோதகத்தின் மட்டில் ஒரு கூட்டுப் பொறுப்பு மனப்பான்மையையும், அதன் பயனாக திருச்சபையின் பல்வேறு பகுதியினரிடையே மறைபோதக உணர்வையும் அவை கட்டியெழுப்ப முயல்கின்றன. திருச்சபை இச்சபைகளை என்றும் ஆசீர்வதித்து, ஊக்குவித்து வந்துள்ளது.

'தமது சொந்த விசுவாசிகளிடையே மறைபரப்புச்சபைகளை, சிறப்பாக பாப்பரசர் மறைபரப்புச் சபைகளைப் பேணி ஆதரிக்கவேண்டும். ஏனெனில் குழந்தைப்பருவம் துவங்கிக் கத்தோலிக்கரை அனைத்துலக உணர்விலும் மறைப்போதக உணர்விலும் ஊறியிருக்கச் செய்வதற்கும், ஒவ்வொன்றின் தேவைக்கேற்ப எல்லா மறைபரப்பு நாடுகளுக்கும் தேவையான பண உதவியைப் பயன்தருமுறையில் பெறுவதற்கும் இவைதான் வழிகள்' ( தி. ம. ப. ப. 38 ) என 2ஆம் வத்திக்கான் சங்கம் கூறுகிறது. மீட்பரின் பணி 84 இல் கூறப்பட்டுள்ளதாவது: '' உலக மறைபோதக தினத்துக்கான எமது செய்திகளில் நான் அடிக்கடி சுட்டிக்காட்டியது போல், உயர்லூக்க வேலையின் முக்கியடாங்கு பாப்பரசர் மறைபோதக சபைகளுக்கே உரியது. விசுவாசப் பரப்புதல் சபை, அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபை, திருப்பாலத்துவ சபை, மறைபோதக ஒன்றியம் ஆகிய இந்த நான்கு சபைகளும், இறைமக்கள் நடுவில் ஓர் அனைத்துலக மறைபோதக மனப்பான்மையை பேணுதலாகிய ஒரு பொதுவான நோக்கத்தைக் கொண்டுள்ளன. உலகம் முழுவதையும் மனந்திருப்புவதற்காக எல்லாத் திருச்சபைகளும் ஒன்றித்து நிற்றல்; இதுவே எமது விருதுவாக்காக இருக்கவேண்டும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கொரு பாதுகாவலன் · உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்

# மறைபரப்பு தினத்துக்கான திருத்தந்தையின் செய்தி



## கிறிஸ்தவ சமூகம் ஒவ்வொன்றும் மறைபோதக இயல்புடையது
## (உலக மறைபரப்பு ஞாயிறு: அக்டோபர் 20)

அன்புச் சகோதரரே,

''அன்பே இறைவன்'' என அப்போஸ்தலரான அருளப்பர் எமக்குக்கூறுகிறார் (1 அரு. 4:8. அழைக்கும் அன்பு, அனுப்பும் அன்பு. திருமகனது பணியும் தூய ஆவியினது பணியும் அன்பின் ஊற்றாகிய பிதாவாகிய கடவுளிடமிருந்தே பிறக்கின்றன என்னும் உண்மையை நாம் அறிவோம். நான் உங்களுக்கு இந்தச் செய்தியை விடுக்கும் தூய ஆவியின் திருநாளன்று தான் இது அப்போஸ்தலருக்கு அளிக்கப்பட்டது என்பதையும் நாம் அறிவோம். அன்பின் ஆவியாகிய தூய ஆவி பொழியப்பட்டதன் விளைவாக திருச்சபை முறையார்ந்தவிதமாக உலகிற் தோன்றி, இறைவன் தமது வாழ்வில் பங்குகொள்ளும் படியும் ஒருவர் ஒருவரை அன்பு செய்யும்படியும் அழைத்து, அவர்களுக்கு அளிக்கும் மீட்பினை மக்களுக்கு அறிவிக்கும் பணியை ஆரம்பித்தது.

மனிதர்கள்மட்டில், — ஒவ்வொரு தனிப்பட்ட ஆண், பெண்மட்டில் — இறைவன் கொண்டுள்ள அன்பையும், இறைவனிடத்திலும் தம்முள்ளும் அவர்கள் கொள்ளும் அன்பையும் அறிவிக்கும்படியாக திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்ட பணி நிறைவேறுவதற்கு எவ்வளவோ தூரம் இருக்கிறது. அது இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றுகூடக் கூறலாம். இந்த உணர்வுதான் 'மீட்பரின் பணி'' என்னும் சுற்றுமடலின் மூலம் திருச்சபையிடம் சகல உறுப்பினருக்கும் ஒரு விசேட வேண்டுகோள் விடுக்கும்படி தூண்டியது. இப்போது மீண்டும் அவர்களைப் பார்த்து, அந்த அழைப்பை ஒரு புதுப்பிக்கப்பட்ட பணிக்கு புதுப்பிக்கப்பட்ட அழைப்பாகவும், காலந்தாழ்த்தாத மேய்ப்புச் செயலுக்கும், இன்னும் தெளிவு பெற்ற மறையறிவுக்கும் ஒரு தூண்டுதலாகவும் கருதவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**1. திருநிலைப்படுத்தப்பட்டு பணிக்காக அனுப்பப்பட்டோர்**

திருச்சபையின் அங்கத்தவர்களான நாமனைவரும் ஒரே ஆவியால் இயக்கப்பட்டு, வெவ்வேறு வழிகளிலாயினும் அனுப்பப்படும்படியாக திருநிலைப்படுத்தப்பட்டோம். திருமுழுக்கின் மூலமாக திருச்சபையின் சொந்தப்பணி எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நற்செய்தி பரப்புவது எமது கடமை. கிறிஸ்தவர் அனைவருக்கும் பொதுவான இத்தலையாய பணி எமது இடையறாத நாளாந்த கரிசனையாக இருக்கவேண்டும்.

உலகில் விரிவடைந்துசென்ற ஆதிக் கிறிஸ்தவர்களைப் பற்றிச் சிந்திப்பது எவ்வளவு உணர்ச்சியூட்டுவதாகவும் ஊக்கமளிப்பதாகவும் இருக்கின்றது. உலகை அவர்கள் முதன் முறையாக ஒரு புதிய பார்வையில் நோக்கினர். எமது சகோதரரின் நன்மைக்கான பணியில் இறையன்பு வெளிப்படுத்தப்படுகிறதென்பதை விளங்கிக்கொண்டவர்களுடைய நோக்கில் அதைப் பார்த்தனர், அவர்களது அனுபவத்தின் நினைவானது, அண்மையில் வெளிவந்த சுற்றுமடலின் முக்கிய கருத்தை மீண்டுமொருமுறை கூறத் தூண்டுகிறது; 'ஏனெனில் மறைபோதகச் செயற்பாடு திருச்சபையைப் புதுப்பிக்கிறது. விசுவாசத்திற்கும், கிறிஸ்தவ தனித்துவத்திற்கும் புத்துயிரளித்து, புத்தார்வத்தையும் தூண்டுதலையும் அளிக்கின்றது. பிறருக்கு அளிக்கப்படும்போது விசுவாசம் உறுதிபெறுகின்றது.' ஆம், மறைபோதகச் செயலானது கிறிஸ்துவின் மணமகளுக்கு மீண்டும் இளமையூட்டி அழகுபடுத்த எமக்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை அளிக்கிறது. அதேவேளையில், பிறருக்கு அளிக்கப்படுகின்ற காரணத்தினாலேயே எமது கிறிஸ்தவ வாழ்வைப் புதுப்பித்து உறுதிப்படுத்தும் ஒரு விசுவாசத்தை அனுபவிப்பதற்கு அது துணைபுரிகிறது.

ஆயினும், வாழ்வினைப் புதுப்பிக்கும் விசுவாசமும், விசுவாசத்தை உறுதிப்படுத்தும் பணியும மறைத்துவைக்கப்பட்ட புதையலைப்போலவோ, தனித்தனிக் கிறிஸ்தவரின் ஏகபோக அனுபவமாகவோ இருக்கமுடியாது. தன்னுள் அடங்கியிருக்கும் கிறிஸ்தவனைவிட பணிக்குப் புறம்பானதொன்று இருக்கமுடியாது. அவனது விசுவாசம் உறுதியானதாயிருந்தால் அது நிச்சயமாக வளர்ந்து, பணியை நோக்கி விரிவடையவேண்டும்.

விசுவாசம் — பணி என்னும் இந்த சோடிச் சொற்கள் விருத்தியடையவேண்டிய முதல் இடம் குடும்பம் என்னும் சமூகமாகும். சமூகத்தின் அடிப்படைக் கலமாகிய இதனை சிதைப்பதற்கு எல்லாம் முனைந்து நிற்கும் இவ்வேளையில், விசுவாசத்தைப் பெற்றுக்கொள்வதற்குமட்டுமல்லாமல் அதன் வளர்ச்சி, அதனைப் பகிர்தல், ஆகவே அதன் பணி ஆகியவற்றின்மட்டில் அதனை முதல் விசுவாச சமூகமாக மீண்டும் ஆக்குவதற்கு நாம் முயற்சியெடுக்கவேண்டும். தம் பிள்ளைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதும், ஒருவர் ஒருவருக்கு நற்செய்தி அறிவிப்பதும் தமது நிலைக்கும், அழைப்புக்கும் உரிய ஒரு வேலையாக பெற்றோரும் தம்பதியரும் காணும் காலம்வந்துவிட்டது. இதனால் குடும்பத்தின் சகல அங்கத்தவர்களும், எல்லா நிலைமைகளிலும் — முக்கியமாக துன்பம், நோய், வயோதிபம் என்னும் சோதனைகள் வரும்போது நற்செய்தியைப் பெற்றுக் கொள்வது சாத்தியமாகின்றது. பணிக்கான கல்வியை அளிப்பதற்கும், குடும்பத்திலேயே பெரும்பாலும் பேணிவளர்க்கப்படும் பணிக்கான அழைத்தல்களை இயற்கையாக உருவாக்குவதற்கும் இது மாற்றீடு செய்யமுடியாத ஒன்றாகும்.

இதற்குச் சமமான மற்றொரு முக்கிய இடம் பங்குச் சமூகம் அல்லது அடிப்படை கிறிஸ்தவ வாழ்வுச் சமூகமாகும். இவை குருக்கள் அல்லது இயக்குநர்களின் பணி வழியாக விசுவாசிகளின் விசுவாசத்திற்கு ஊட்டம் அளிப்பதோடு, விலகிப்போனவர்களையும் புறத்தே உள்ளவர்களையும் தேடிச் செல்ல வேண்டும். இவ்வாறு அவை மறைப்பணி புரிகின்றன. மறைப்பணி புரியாத எந்தக் கிறிஸ்தவ சமூகமும் தனது கடமையை பிரமாணிக்கமாக நிறைவேற்றுவதில்லை. ஒன்றில் அது மறைப்பணி புரியும் சமூகமாயிருக்கும் அல்லது அது கிறிஸ்தவ சமூகமாகவே இராது. ஏனெனில் இவை ஞானஸ்நானத்தினாலும் ஏனைய திருவருட்சாதனங்களினாலும் ஏற்படுத்தப்பட்ட மெய்ம்மை நிலையின் இரு பரிமாணங்களேயாகும். கிறிஸ்தவா அல்லாதாருக்கு முதன் முதலாக நற்செய்தி அறிவிப்பது என்றும் திட்டவட்டமாக விளங்கிக் கொள்ளப்பட்ட இப்பணி, பல நூற்றாண்டுகளாக நற்செய்தி பெற்ற கிறிஸ்தவ சமூகங்களின் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறது; எங்களுக்குள் செய்யப்படும் பணியாக மேலும் மேலும் மாறிக் கொண்டு வருகிறது. முன்னெப்போதையும் விட இன்று இப்பொறுப்பானது சகல சமூகங்களிலும் மிக அவசரமானதாக உள்ளது.

இன்று இப்பணிக்கு ஏற்பட்டுள்ள புதிய தேவைகளின் மத்தியில், திருச்சபையின் மறைப்பணி தாராளமானதாகவும், காலந்தவறாததாகவும், நிறைபயனுடையதாகவும் இருக்கும் பொருட்டு, இறைவன் திருச்சபையில் தோன்றச்செய்த இயக்கங்களும் மறைசார்ந்த குழுக்களும் ஊக்கமூட்டுவனவாயுள்ளன.

**2 திருச்சபையின் மறைபோதக அலுவலில் ஒத்துழைப்பது எப்படி?**

திருச்சபையின் அங்கத்தவரெல்லாம் பணிக்காக அபிஷேகம் செய்யப்பட்டவராயின், அவர்கள் எல்லாரும் தம் சொந்த முயற்சியின் மூலம் கிறிஸ்துவை உலகிற்குக் கொண்டு செல்லும் பொறுப்புடையவராவர். இந்த உரிமையில் / கடமையில் பங்கு கொள்வது ''மறைபோதக ஒத்துழைப்பு'' என அழைக்கப்படுகிறது. இது பரிசுத்தமான வாழ்க்கையிலிருந்தே தோன்றுவதாகும். திராட்சைக் கிளைகளைப் போல கிறிஸ்துநாதருடன் ஒட்டுவைக்கப்பட்டவர்களே அதிக கனி கொடுக்க முடியும். குழந்தை இயேசுவின் புனித திரேசம்மாள் எந்தப் பணிக்காவது அனுப்பப்படாதிருந்த போதிலும் அவளை மறைபோதக நாடுகளின் பாதுகாவலியாக ஏற்படுத்த முடிந்தது. தனது விசுவாசத்தின்படி வாழ்ந்து, அன்புக்கட்டளையை அனுசரிப்பவர் அதே செபம், தவம், சான்று வாழ்வு ஆகியவற்றுடன் கூடிய ஆன்மீக ஒத்துழைப்பின் மூலம் சகல மக்களையும் உள்ளடக்கக் கூடியதாக தனது செயற்பாட்டின் எல்லையை விரிவுபடுத்துகிறார்.

திருவார்த்தையை அறிவிக்கும்போது இறையருளினால் அது பலன் கொடுக்கும் படிக்கு, மறைப்பணியாளரின் வழியிலும், வேலையிலும் செபம் இணைந்திருக்க வேண்டும். விசுவாசத்துடன் ஏற்கப்பட்டு, கிறிஸ்துவோடு அனுபவிக்கப்படும் தியாகங்களுக்கு ஒரு மீட்கும் வல்லமை உண்டு மறைபோதகருடைய தியாகங்களை விசுவாசிகள் பகிர்ந்து கொண்டு அவர்களுக்கு ஆதாரமாயிருப்பது அவசியமாதலால், உடலிலோ உள்ளத்திலோ துன்புறுபவர் எவரும் தனது துன்பத்தை இயேசுவுடன் பிதாவுக்கு ஒப்புக் கொடுப்பதன் மூலம் தானும் ஓர் மறைப்பணியாளராகலாம். கிறிஸ்தவ வாழ்க்கை முறை அளிக்கும் சாட்சியம் இறைவார்த்தையைப் போதிப்பதற்கு மௌனமான ஆனால் நிறைபயனுடைய ஒரு வழியாகும். கடவுளைத் தேடுவதில் அசட்டையாகக் காணப்படும் இன்றைய ஆண்களும், பெண்களும் உண்மையில் அதன் தேவையை ஆழமாக உணர்கின்றனர். தமது முன்மாதிரியின் மூலம் கடவுளை வெளிப்படுத்தும் பரிசுத்தவான்களினால் அவர்கள் கவரப்படுகிறார்கள், இயக்கப்படுகிறார்கள்.

மறைபோதக அலுவலில் ஆன்மீக ஒத்துழைப்பென்பது எல்லாவற்றுக்கும் மேலாக மறைபோதக அழைத்தல்களை அதிகரிப்பதற்குத் துணையாயிருக்கவேண்டும். ஆகையினாற்தான் நான் மீண்டும் எமது காலத்து இளைஞரையும், யுவதியரையும் நோக்கி இறைவன் மறைபோதகப் பணிக்காகத் தம்மைப் பின்செல்லும்படி அழைத்தால் ''ஆம்'' எனப் பதிலிறுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். இது போன்ற தீவிரமான, துணிகரமான தீர்மானம் வேறொன்றுமில்லை; கிறிஸ்துவில் விசுவாசம் என்னும் விலை மதிப்பற்ற பரிசை இன்னும் பெற்றுக்கொள்ளாத சகோதரரின் பணிக்குத் தம்மை அர்ப்பணிப்பதற்காக எல்லாவற்றையும் துறப்பது.

உலக மறைபோதக தினமானது செபத்தில் மட்டுமல்ல, ஒருமைப்பாட்டிற்கான அர்ப்பணத்திலும், மறைபரப்புப் பணிக்காக உதவிகளையும், பொருள்வளங்களையும் பகிர்ந்துகொள்வதிலும் திருச்சபையின் மக்களை ஒன்றுபடுத்துகிறது. உலகிலுள்ள பல்வேறு மக்களுக்கு எத்தகைய தேவைகள் இருக்கின்றனவோ அவற்றிற்கு ஒத்திசைந்திருப்பதே இந்த அர்ப்பணம். மறைபோதக நாடுகளில், அதாவது பெரும்பாலும் உலகின் தென் பாகத்தில் அமைந்துள்ள நாடுகளில் வசிப்போரின் தேவைகளோ அநந்தம், அவர்கள் எமது சகோதர சகோதரிகள். ஆகவே குருக்களுக்கும் மறைப்பணியாளருக்கும் ஏராளமான பொருள்வளம் தேவைப்படுகின்றது. நற்செய்திப்பணிக்காக மட்டுமல்ல — இது முதன்மையான பணிதான், பாரிய பணியுங்கூட — ஆனால் ஒவ்வொரு மறைப்பணியுடனும் மனித முன்னேற்றத்துக்காக தேவைப்படும் பொருளுதவியும் பிற உதவிகளும் அளிப்பதற்கும் இது தேவைப்படுகின்றது.

உலக மறைபோதக தினத்தைக் கொண்டாடுவது, பிறர்நல அமைப்புக்கள் செயற்படுவதற்கும், தனிப்பட்ட கிறிஸ்தவர்களும், அவர்களது குழுக்களும் பிறரன்பைப் பயனுள்ள விதத்தில் செயற்படுத்துவதற்கும் ஒரு தூண்டுகோலாக

(தொடர்ச்சி 4ம்ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# மறைபரப்பு தினத்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாக, "இது திருச்சபையின் வாழ்வில் ஒரு முக்கிய தினமாகும் ஏனெனில் நற்கருணை வழிபாட்டில் இறைவனுக்கு அளிக்கப்படும் காணிக்கையைப்போல், உலகின் எல்லா மறைபோதகப் பணிகளுக்கும் கொடுப்பது எப்படி என்பதைக்கற்பிக்கிறது" (மீட்பரின் பணி 81.)

3. திருத்தந்தையின் மறைபோதக துணைச்சபைகளை ஊக்குவித்தல்

மறைபோதகத்துக்கு ஊக்குவிப்பும் ஒத்துழைப்பும் அளிக்கும் இப்பணி திருச்சபையின் அனைத்து மக்களையும் உள்ளடக்கியதாகும். முற்கூறிய சுற்றுமடலில் நான் வற்புறுத்தியதுபோல், இப்பணியில் மறைபோதக துணைச்சபைகளுக்குரிய திட்டவட்டமான பொறுப்பை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

விசுவாசப் பரப்புதல் சபை, அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபை திருப்பாலத்துவ சபை, மறைபோதக ஒன்றியம் ஆகிய இந்த நான்கு சபைகளும் இறைமக்களின் உள்ளத்தில் மறைபோதக ஆர்வத்தைத் தூண்டுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன தலத்திருச்சபைகளுக்குள் அனைத்துலக திருச்சபையை அவை நினைவூட்டுகின்றன.

குறிப்பாக, தனது நிறுவனத்தின் 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் மறைபோதக ஒன்றியத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். குருக்களையும் இருபாலாரான துறவிகளையும் கிறிஸ்தவ குழுத்தலைவர்களையும் ஊக்குவிப்பதில் அது பாராட்டத்தக்க ஒரு பணியைப் புரிந்து வருகிறது. இதன் மூலம் மேய்ப்பு. மறைபோதகப் பணிகளுக்கு பொருத்தமான வடிவங்கள் கொடுக்கப்பட்டு மறைபோதகத்தின் இலட்சியம் நிறைவேற ஏதுவாகிறது.

சுற்றுமடலில் நான் ஏற்கெனவே வலியுறுத்தியவற்றை இம்மறைபோதக துணைச் சபைகள்தான் முதலில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். "தனித் திருச்சபைகள், பங்குகள், சபைகள், குழுக்கள், முக்கியமாக இளைஞர் குழுக்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளில் மறைபோதகத்தை ஊக்குவிப்பதை அடிப்படைக் கூறாக ஆக்கவேண்டும்" (83) இந்த முக்கிய பொறுப்பில், ஊக்குவிப்பதில், மறைபோதக உருவாக்கத்தில், மறைப்பணிக்குத் துணைபுரிய அறச்செயல்களை ஒழுங்குசெய்வதில் மறைபோதக சபைகள்தான் முன்னணியில் நிற்கவேண்டும்.

ஆனால், இச்சபைகளின் நோக்கத்தையும், மறைப்பணியில் அவற்றின் நிரந்தரமான அர்ப்பணத்தையும் கவனத்திற்குக் கொண்டு வந்த பின், உலகில் பரந்துள்ள குருக்கள் துறவிகள், பொதுநிலைத் தொண்டர்கள் ஆகிய சகல மறைப்பணியாளருக்கும் நன்றி தெரிவித்து உற்சாகமளிக்கும் சில அன்பு வார்த்தைகளைக் கூறாமல் இச்செய்தி நிறைவு பெறாது. நற்செய்திப்பணியை நிறைவேற்றுவதில் பெருந்தியாகங்களை, உயிர்த்தியாகத்தைத் தன்னும் செய்ய வேண்டியிருந்த போதிலும் நம்பிக்கையுடன் நற்செய்திப்பணியைத் தொடர்வதற்கு இது அவர்களை ஊக்குவிக்கும்.

அன்புக்குரிய மறைப்பணியாளரே! எனது எண்ணங்களும் எனது அன்பும், முழுத் திருச்சபையினது நன்றியும் உங்களோடு என்றும் இருக்கும். சாட்சிகளாகவும், திருச்சபையின் அனைத்துலகப் பணியை செயற்படுத்துபவராகவும் உள்ள நீங்கள் திருச்சபையின் உயிருள்ள நம்பிக்கையாக மட்டும் இருக்கவில்லை. எங்கள் எல்லோரையும் அழைத்து, அபிஷேகம் செய்து அனுப்பியதுடன், உங்களுக்கு விசேட பொறுப்பைத் தந்த இறைவனது அன்புக்கு நீங்கள் காணக்கூடிய, நம்பக்கூடிய ஓர் அடையாளமாகவும் இருக்கிறீர்கள். உங்களுக்கு அளிக்கப்பட்ட விசேட பொறுப்பு மக்களுக்கு மறையறிவித்தல் என்னும் தனிச்சிறப்பு வாய்ந்த கொடையாகும் நீங்கள் கிறிஸ்துவை உலகிற்குக் கொண்டு செல்கிறீர்கள். அவருடைய பதிலாளராகிய நான் அவர் பெயரால் உங்களை ஆசீர்வதித்து எனது உள்ளத்தில் வைத்திருக்கிறேன். உங்களை ஆசீர்வதிக்கும்போது, உங்களது அப்போஸ்தலத்துவமாகிய நற்செய்திப்பணியிலும், முழுமனித முன்னேற்றத்தை ஊக்குவிப்பதிலும், அன்போடும் பெருந்தன்மையோடும் பங்குகொள்ளும் அனைவரையும் ஆசீர்வதிக்கிறேன்.

அப்போஸ்தலரின் இராக்கினியான மரியம்மாள் மறைப்பணியாளரான உங்களையும், திருச்சபையின் அனைத்துலகப் பணியில் எந்த விதத்திலாவது ஒத்துழைப்பவரான அனைவரையும் வழிநடத்தித் துணை புரிவாராக.

1991 மே 19 ஆம் திகதி— பெந்திக்கோஸ்து திருநாளன்று, எனது ஆட்சியின் 13 ஆம் ஆண்டிலே வத்திக்கான் நகரில் வெளியிடப்பட்டது.

### 'போராட்டமும் வெற்றியும்'

ஊக்கமுள்ள ஆன்மா சிரமமில்லாத வெற்றியை வெறுக்கிறது.

உலக வரலாற்றில் காணப்பெறும் இயக்கங்கள் எல்லாம் போராட்டம், உற்சாகம் போன்றவற்றின் வெற்றிச் சின்னங்களே. — எமர்ஸன்

## பேராசிரியரின் மர்ம மறைவின் 10வது ஆண்டு நினைவு

தாய்வானில் பேராசிரியர் சென் வென் செங்கின் 10வது நினைவு தினமான ஜூலை 2ஆம் திகதி பிறெஸ்பிற்றேரியன் ஆலயத்தில் நடைபெற்ற வழிபாட்டில் சுமார் 600 பேர் கலந்து கொண்டனர்.

அத்தருணத்தில் உரையாற்றிய தாய்வான் இறையியற் கல்லூரியின் முன்னாட் பேராசிரியரான வண. ஜோண் ரின் ஏர்-யூ தாய்வான் தீவின் விடுதலைக்கு இன்னும் எவ்வளவோ தியாகங்கள் வேண்டியிருக்கிறதென்றும் சென் பயங்கரவாதத்திற்கெதிரான போராட்டத்தின் சின்னமாக விளங்கினார் என்றும் கூறினார்.

அமெரிக்காவில் தொழிலாற்றிய பேராசிரியர் செங் தாய் நாட்டுக்கு வந்தபோது இராணுவத்தினால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் இவரது உடல் தாய்வான் பல்கலைக்கழகத்தின் நூலகத்துக்குப் பக்கத்தில் காணப்பட்டது. அது தற்கொலை அல்லது விபத்து என்று அரசாங்கம் கூறியது. ஆனால் செங்கின் தந்தையும் பிறரும் அவர் இராணுவத்தின் சித்திரவதையினால் இறந்ததாகக் கூறுகின்றனர்.

செங் நினைவு தினம் தாய்வான் யூ. எஸ். கலாசார பரிமாற்று நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது. இறுதியில் செங்கின் 10 வயது மகன் நன்றி கூறினார்.

தாய்வானிய இனத்தவருக்கெதிராக கோமிண்டாங் அரசு பல கெடுபிடிகளை அனுசரித்து வருகிறது.

## சீனாவில் பார்வையற்ற பெண் உபதேசியாரின் பணி

தென் சீனாவிலுள்ள குவாங்டொங் மாநிலத்தில் பார்வையற்ற ஒரு மூதாட்டி குருவுக்குத் துணையாக மறைக்கல்வி கற்பித்து வருகிறார்.

சூசென் மாமி என அழைக்கப்படும் இவர் கிராமம் கிராமமாகச் சென்று 75 வயதான பிதா மா சிஹானுக்கு உதவி வருகிறார். பிரேயில் எழுத்து வாசிக்கும் இவர் அதன் துணையால் சிறியோருக்கும்பெரியோருக்கும், சில அரச அதிகாரிகளுக்குக் கூட மறையறிவித்து வருகிறார். அவளது பாடங்கள் ஒரு காதல் கதையைப் போல் இறைவன் மீது அவள் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துவனவாக உள்ளன என பிதா மா கூறுகிறார்.

சூசென் பார்வையற்றோர் இல்லமொன்றில் வேறு 20 பேருடன் வசித்துவருகிறார். இவர்கள் யாவரும் இளமையிலேயே கன்னிமை வாக்குத்தத்தம் செய்து திருச்சபையில் உபதேசிமாராகப் பணிசெய்தவர்கள்.

கலாசாரப் புரட்சியின்போது குருக்களையும், கன்னியரையும் போல விசுவாசத்திற்காகத் துன்புறுத்தப்பட்டவர்கள்.

### என்றும் எம் நினைவில் நிறைந்திருக்கும்



சவரிமுத்து அல்பிறட்

ஆண்டவன் படைப்பு
02–05–1916

அந்நியன் அழிப்பு
23–10–1987

சீவியத்தில் என்னை
நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை
மறவாதீர்கள்,

23-10–91 இல் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் நினைவால் உருகும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

A/33/91

### விண்ணக வாழ்வின் 2ஆம் வருட நினைவஞ்சலி



சிமியோன் ஞானப்பிரகாசம்
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர்)

மலர்வு: 01–06–1910 உதிர்வு: 30–09–1989

" சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம் "

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவரது பிரிவால் துயருறும்
அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

A/40/91

## ST. PATRICK'S COLLEGE, JAFFNA
## பிரவேச விண்ணப்பம் — 1992

பின்வரும் வகுப்புகளுக்கு மாத்திரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் வருடம்: 01–02 86 – 31–01–1987 க்குள் பிறந்திருக்க வேண்டும்.
நான்காம் வருடம்: 1983 இல் பிறந்திருக்க வேண்டும்.
ஆறாம் வருடம்: 1981 ,, ,, ,, .
ஒன்பதாம் வருடம்: 1978 ,, ,, ,, .

★ விண்ணப்பப் பத்திரம் ரூபா 40.00 (பரீட்சைக் கட்டணம் உட்பட) 01–10 1991. தொடக்கம் 21–10–1991 வரை பாடசாலை நாட்களில் கல்லூரிக் காரியாலயத்தில் காலையில் நேரில் வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 24–10–1991 ஆம் திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் காலை 9.00–12.00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ பிரவேசப் பரீட்சைத் தினம் 02–11–1991 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

★ 6 ஆம், 9 ஆம் வருட வகுப்புகளுக்கு நடாத்தப்படும் பிரவேசப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ். ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

கல்லூரி அதிபர் A/35/91

## கத்தோலிக்க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேறு தொழுநோய் நிலையங்களிலுமிருந்து வருவோருக்கு புனர்வாழ்வு அளித்து வருகிறார்.

கத்தோலிக்க வைத்தியர் சங்கத்தின் அங்கத்தவரான பெயின் புனரமைப்பு அறுவை வைத்தியத்தில் பேர் பெற்றவராவார்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்